**යටිතල පහසුකම් සහ උපාය මාර්ගික සංවර්ධනය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාව**

වෙත යොමු කරන ලද

ශ්‍රී ලංකා විදුලිබල (සංශෝධන) පනත් කෙටුම්පත

සම්බන්ධයෙන්

**යටිතල පහසුකම් සහ උපාය මාර්ගික සංවර්ධනය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාවේ වාර්තාව**

පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරන ලද්දේ

**යටිතල පහසුකම් සහ උපාය මාර්ගික සංවර්ධනය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාවේ සභාපති**

**ගරු එස්.එම් මරික්කාර් මහතා, පා.ම. විසිනි**

**2025 ජූලි මස 22 වැනි අඟහරුවාදා**

---

**உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட**

**இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம்**

**மீதான**

**உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின்**

**அறிக்கை**

**உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின்**

**தவிசாளர்**

**கௌரவ எஸ்.எம்.மரிக்கார், பா.உ. அவர்களால்**

**பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.**

**2025 யூலை 22, செவ்வாய்க்கிழமை.**

---

**Report of the**

**Sectoral Oversight Committee on Infrastructure and Strategic Development**

**on**

**Sri Lanka Electricity (Amendment) Bill**

**referred to**

**Sectoral Oversight Committee on Infrastructure and Strategic Development**

**Presented to Parliament by**

**Hon. S.M. Marikkar, M.P.**

**Chair of the**

**Sectoral Oversight Committee on Infrastructure and Strategic Development**

**Tuesday, 22 July 2025**

## <u>குழுவின் அறிக்கை</u>

உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவானது, 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11, 15 மற்றும் 17 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற அதனது கூட்டங்களில் பின்வரும் சட்டமூலத்தை ஆராய்ந்தது.

- **இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம்**

(2025 மே 23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.)

**<u>2025 யூலை 11 ஆம் திகதி</u>**

**<u>குழுவின் அங்கத்தவர்கள்</u>**
கௌரவ எஸ்.எம். மரிக்கார், பா.உ. (தவிசாளர்)
கௌரவ அஜித் பி. பெரேரா, பா.உ.
கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி, பா.உ.
கௌரவ ரவீந்திர பண்டார, பா.உ.
கௌரவ ஷாந்த பத்ம குமார சுபசிங்ஹ, பா.உ.
கௌரவ (திருமதி) சட்டத்தரணி கீதா ஹேரத், பா.உ.,

**<u>குழுவின் அங்கத்தவர்கள் அல்லாத உறுப்பினர்கள்</u>**

கௌரவ கபீர் ஹசீம், பா.உ.
கௌரவ தனுர திசாநாயக, பா.உ.

**<u>குழுவின் செயலாளர்</u>**
திருமதி. சூலா ஹேரத், உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)

**<u>அலுவலர்கள்</u>**

**<u>வலுசக்தி அமைச்சு</u>**
திரு. கே.எல்.ஆர்.சி. விஜயசிங்க, மேலதிக செயலாளர் (மின்சக்தி மற்றும் மின்சக்தித் துறை சீர்திருத்தங்கள்)

பொறியியலாளர் புபுது நிரோஷன் ஹெதிகால்லகே, பணிப்பாளர் நாயகம், மின்சக்தித் துறைச் சீர்திருத்தச் செயலகம்
திரு. இந்திர மஹகலந்த, உறுப்பினர், மின்சக்தித் துறைச் சீர்திருத்தச் செயலகம்

**<u>இலங்கை மின்சார சபை</u>**
(பேராசிரியர்) சாலிய ஜயசேகர, உப தலைவர்
பொறியியலாளர் டப்ளியூ. எதுசூரிய, பதில் பொது முகாமையாளர்
பொறியியலாளர் (திருமதி) எச்.ஆர்.பி. வன்னியாராச்சி, மேலதிக பொது முகாமையாளர் (விநியோகப் பிரிவு 2)
பொறியியலாளர் (திருமதி) ஆர்.கே.பி.எஸ். குணதிலக்க, மேலதிக பொது முகாமையாளர் (நிறுவன மூலோபாயம்)
பொறியியலாளர் எம்.எம்.அலியார், பிரதிப் பொது முகாமையாளர் (மின்சக்தித் துறைச் சீர்திருத்தம் மற்றும் இணைப்பு அலுவலகம்)

**<u>இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை</u>**
பேராசிரியர் ரி.எம்.டப்ளியூ.ஜே. பண்டார, தலைவர்
திரு. சமில ஜயசேகர, பணிப்பாளர் (R&D)

**<u>வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார (தனியார்) கம்பனி</u>**
திரு. ஜி.ஜே. அலுத்கே, தலைவர்
டாக்டர். பி.எஸ்.என். டி சில்வா, பொது முகாமையாளர்
திரு. எஸ்.டி.சி. குணவர்தன, மேலதிக பொது முகாமையாளர் (செயற்பாடுகள்)
திரு. மதுர கமகே, மேலதிக பொது முகாமையாளர் (பொறியியல்)

**இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு**
திரு. தமித்த குமாரசிங்க, பணிப்பாளர் நாயகம்
திரு. காஞ்சன சிறிவர்தன, பிரதிப் பணிப்பாளர் நாயகம் –IS
திரு. யசந்த ரதுவிதான, பணிப்பாளர், நுகர்வோர் அனுமதிப்பத்திரம்
திரு. அமில ராஜபக்ஷ, பிரதிப் பணிப்பாளர், அனுமதிப்பத்திரம்

**சட்டவரைஞர் திணைக்களம்**
திருமதி. ஆர்.பி. கொடிதுவக்கு, உதவி சட்டவரைஞர்
திருமதி. ஆர்.சி. மிகிராணி, உதவி சட்டவரைஞர்

**இலங்கை பொறியியலாளர் நிறுவனம்**
பொறியியலாளர் (பேராசிரியர்) டப்ளியூ.டி. அசங்க எஸ். ரொட்ரிகோ
பொறியியலாளர் என்.ஆர். ஜயசிங்க
பொறியியலாளர் பி.என்.ஐ.எப்.ஏ. விக்ரமசூரிய

**சட்டமா அதிபர் திணைக்களம்**
திருமதி. வி.எஸ்.பி. சிறிவர்தன, சனாதிபதி சட்டத்தரணி, மேலதிக மன்றாடி அதிபதி
திருமதி. இஷாரா மதரசிங்ஹ, அரச சட்டவாதி

**இலங்கை வர்த்தக சம்மேளனம்**
திரு. ரியாஸ் எம். சங்கானி, இணைத் தலைவர் - வலுச்சக்தி குழு
திரு. ஷிரான் பர்னாந்து, பிரதான பொருளாதார கொள்கை ஆலோசகர்

**தேசிய வர்த்தக சம்மேளனம்**
டாக்டர் லக்மால் பர்னாந்து, முகாமைத்துவப் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி - ரேகன் புத்துப்பிக்கத்தக்க வலுசக்தி பிரைவெட் லிமிடெட்
எல்.பி. ஜயசிங்க, முகாமைத்துவப் பணிப்பாளர் - ஜியோடெக் பிரைவெட் லிமிடெட்

**CEB பொறியியலாளர் சங்கம்**
பொறியியலாளர் ரி.ஏ. வன்னியாரச்சி
பொறியியலாளர் இசுரு கஸ்தூரிரத்ன

**புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி உருவாக்குநர்களின் சம்மேளனம்**
திரு. ஜி.ஜி.எஸ். கோமஸ், பிரதிநிதி

**ரூப்டாப் சோலர் டெவலொபர்ஸ் சங்கம்**
திரு. எச்.எஸ்.பி. பத்திராஜ, தலைவர்
திரு. ரி. திரியம்பகன், பொருளாளர்
திரு. டி.என். குணவர்தன

**ஆலோசகர்**
நிஹால் ரஞ்சன் சூரியாரச்சி, பொறியியலாளர் (சுயாதீன)

**2025 யூலை 15 ஆம் திகதி**

**குழுவின் அங்கத்தவர்கள்**
கௌரவ எஸ்.எம். மரிக்கார், பா.உ. (தவிசாளர்)
கௌரவ அஜித் பி. பெரேரா, பா.உ.
கௌரவ நலீன் பண்டார ஜயமஹ, பா.உ.
கௌரவ ரவீந்திர பண்டார, பா.உ.
கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான, பா.உ.
கௌரவ (திருமதி) சட்டத்தரணி கீதா ஹேரத், பா.உ.,

**குழுவின் அங்கத்தவர்கள் அல்லாத உறுப்பினர்கள்**
கௌரவ கபீர் ஹசீம், பா.உ.

**<u>குழுவின் செயலாளர்</u>**
திருமதி. சூலா ஹேரத், உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)

**<u>அலுவலர்கள்</u>**

**<u>வலுசக்தி அமைச்சு</u>**
பேராசிரியர் கே.ரி.எம். உதயங்க ஹேமபால, அமைச்சின் செயலாளர்

திரு. கே.எல்.ஆர்.சி. விஜயசிங்க, மேலதிக செயலாளர் (மின்சக்தி மற்றும் மின்சக்தித் துறை சீர்திருத்தங்கள்)

பொறியியலாளர் புபுது நிரோஷன் ஹெதிகால்லகே, பணிப்பாளர் நாயகம், மின்சக்தித் துறைச் சீர்திருத்தச் செயலகம்
திரு. இந்திர மஹகலந்த, உறுப்பினர், மின்சக்தித் துறைச் சீர்திருத்தச் செயலகம்

**<u>இலங்கை மின்சார சபை</u>**
பொறியியலாளர் டப்ளியூ. எதுசூரிய, பதில் பொது முகாமையாளர்

பொறியியலாளர் (திருமதி) எச்.ஆர்.பி. வன்னியாராச்சி, மேலதிக பொது முகாமையாளர் (விநியோகப் பிரிவு 2)

பொறியியலாளர் (திருமதி) ஆர்.கே.பி.எஸ். குணதிலக்க, மேலதிக பொது முகாமையாளர் (நிறுவன மூலோபாயம்)

பொறியியலாளர் எம்.எம்.அலியார், பிரதிப் பொது முகாமையாளர் (மின்சக்தித் துறைச் சீர்திருத்தம் மற்றும் இணைப்பு அலுவலகம்)

**<u>இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை</u>**
பேராசிரியர் ரி.எம்.டப்ளியூ.ஜே. பண்டார, தலைவர்

**<u>வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார (தனியார்) கம்பனி</u>**

திரு. ஜி.ஜே. அலுத்கே, தலைவர்

டாக்டர். பி.எஸ்.என். டி சில்வா, பொது முகாமையாளர்

திரு. எஸ்.டி.சி. குணவர்தன, மேலதிக பொது முகாமையாளர் (செயற்பாடுகள்)

திரு. மதுர கமகே, மேலதிக பொது முகாமையாளர் (பொறியியல்)

**<u>இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு</u>**
திரு. தமித்த குமாரசிங்க, பணிப்பாளர் நாயகம்

திரு. காஞ்சன சிறிவர்தன, பிரதிப் பணிப்பாளர் நாயகம் –IS

திரு. யசந்த ரதுவிதான, பணிப்பாளர் நுகர்வோர், அனுமதிப்பத்திரம்

திரு. அமில ராஜபக்ஷ, பிரதிப் பணிப்பாளர், அனுமதிப்பத்திரம்

**<u>சட்டவரைஞர் திணைக்களம்</u>**
திருமதி. ஆர்.பி. கொடிதுவக்கு, உதவி சட்டவரைஞர்

திருமதி. ஆர்.சி. மிகிராணி, உதவி சட்டவரைஞர்

**<u>சட்டமா அதிபர் திணைக்களம்</u>**
திருமதி. வி.எஸ்.பி. சிறிவர்தன, சனாதிபதி சட்டத்தரணி, மேலதிக மன்றாடி அதிபதி

திரு. மேதக பர்னாந்து, அரச சட்டவாதி

**<u>CEB பொறியியலாளர் சங்கம்</u>**
பொறியியலாளர் இசுரு கஸ்தூரிரத்ன

**<u>எல்.டி.எல் ஹோல்டிங்ஸ் (பிரைவெட்) லிமிடெட்</u>**

திரு. தம்மிக நாணயக்கார, பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி

திருமதி. சுரிந்தி விஜேதுங்க, மின் பொறியியலாளர்

திரு. சுதத் அன்னாசிவத்த, பிரதம செயற்பாட்டு அதிகாரி

**<u>ஆலோசகர்</u>**
நிஹால் ரஞ்சன் சூரியாரச்சி, பொறியியலாளர் (சுயாதீன)

**2025 யூலை 17 ஆம் திகதி**

**குழுவின் அங்கத்தவர்கள்**

கௌரவ எஸ்.எம். மரிக்கார், பா.உ. (தவிசாளர்)

கௌரவ அஜித் பி. பெரேரா, பா.உ.

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ, பா.உ.

கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி, பா.உ.

கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான, பா.உ.

கௌரவ ஷாந்த பத்ம குமார சுபசிங்ஹ, பா.உ.

**குழுவின் அங்கத்தவர்கள் அல்லாத உறுப்பினர்கள்**

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா, பா.உ.

**குழுவின் செயலாளர்**

திருமதி. சூலா ஹேரத், உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)

**அலுவலர்கள்**

**வலுசக்தி அமைச்சு**

பேராசிரியர் கே.ரி.எம். உதயங்க ஹேமபால, அமைச்சின் செயலாளர்

திரு. கே.எல்.ஆர்.சி. விஜயசிங்க, மேலதிக செயலாளர் (மின்சக்தி மற்றும் மின்சக்தித் துறை சீர்திருத்தங்கள்)

பொறியியலாளர் புபுது நிரோஷன் ஹெதிகால்லகே, பணிப்பாளர் நாயகம், மின்சக்தித் துறைச் சீர்திருத்தச் செயலகம்

திரு. இந்திர மஹகலந்த, உறுப்பினர், மின்சக்தித் துறைச் சீர்திருத்தச் செயலகம்

**இலங்கை மின்சார சபை**

பொறியியலாளர் டப்ளியூ. எதுசூரிய, பதில் பொது முகாமையாளர்

பொறியியலாளர் (திருமதி) எச்.ஆர்.பி. வன்னியாராச்சி, மேலதிக பொது முகாமையாளர் (விநியோகப் பிரிவு 2)

பொறியியலாளர் (திருமதி) ஆர்.கே.பி.எஸ். குணதிலக்க, மேலதிக பொது முகாமையாளர் (நிறுவன மூலோபாயம்)

பொறியியலாளர் எம்.எம்.அலியார், பிரதிப் பொது முகாமையாளர் (மின்சக்தித் துறைச் சீர்திருத்தம் மற்றும் இணைப்பு அலுவலகம்)

**வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார (தனியார்) கம்பனி**

திரு. ஜி.ஜே. அலுத்கே, தலைவர்

டாக்டர். பி.எஸ்.என். டி சில்வா, பொது முகாமையாளர்

திரு. எஸ்.டி.சி. குணவர்தன, மேலதிக பொது முகாமையாளர் (செயற்பாடுகள்)

திரு. மதுர கமகே, மேலதிக பொது முகாமையாளர் (பொறியியல்)

**இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு**

திரு. தமித்த குமாரசிங்க, பணிப்பாளர் நாயகம்

திரு. காஞ்சன சிறிவர்தன, பிரதிப் பணிப்பாளர் நாயகம் –IS

திரு. யசந்த ரதுவிதான, பணிப்பாளர், நுகர்வோர் அனுமதிப்பத்திரம்

திரு. அமில ராஜபக்ஷ, பிரதிப் பணிப்பாளர் , அனுமதிப்பத்திரம்

**சட்டவரைஞர் திணைக்களம்**

திருமதி. ஆர்.பி. கொடிதுவக்கு, உதவி சட்டவரைஞர்

திருமதி. ஆர்.சி. மிகிராணி, உதவி சட்டவரைஞர்

**சட்டமா அதிபர் திணைக்களம்**

திருமதி. வி.எஸ்.பி. சிறிவர்தன, சனாதிபதி சட்டத்தரணி, மேலதிக மன்றாடி அதிபதி

திரு. மேதக பர்னாந்து, அரச சட்டவாதி

**ஆலோசகர்**

நிஹால் ரஞ்சன் சூரியாரச்சி, பொறியியலாளர் (சுயாதீன)

**அறிமுகம்**

2024 இன் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டம் மின்சாரக் கைத்தொழிலுக்குரிய சீர்திருத்தங்களைச் செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்; தேசிய மின்சார ஆலோசனை சபையைத் தாபிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்; 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு இந்தச் சட்டத்தின் பிரகாரம் ஒழுங்குறுத்தும் அமைப்பாக இருக்கும் வகையில் ஏற்பாடு செய்தல்; மின்னுற்பத்தி, மின்சார செலுத்துகை, மின்சாரப் பகிர்ந்தளிப்பு, மின்சார வணிகம், மின்சார விநியோகம் மற்றும் மின்சாரக் கொள்வனவு முதலிய எல்லா செயற்பாடுகளுடனும் தொடர்புடைய 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கூட்டிணைந்த நிறுவனங்களைக் கூட்டிணைக்க ஏற்புடைய சட்டவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பன தொடர்பான ஒரு சட்டமாகும். இந்தச் சட்டம் தொடர்புடைய எல்லா செயற்பாடுகளுக்கும் ஏற்புடையதாக இருக்க வேண்டிய நடபடிமுறைகளைக் குறிப்பீடுசெய்வதற்கும்; 2009 இன் 20 ஆம் இலக்க மின்சாரச் சட்டத்தை நீக்கிவிட்டு அதனுடன் தொடர்புடைய எல்லா விடயங்களுக்கும் அல்லது அதற்கான இடைநேர் விடயங்களுக்கும் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் அதிகாரத்தத்துவத்தை உரித்தளிக்கும்.

2024 இன் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துவதும் மற்றும் அந்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள குறிக்கோள்கள் இலங்கையின் தேசிய கொள்கைக்கும் அதன் சர்வதேச பொறுப்புக்களுக்கும் இணங்க காணப்படுகின்றனவா என்பதை உறுதிசெய்யும் வகையில், முதன்மைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவுகளின் கீழ் திருத்தங்களைச் செய்வதும் இந்தச் சட்டமூலத்தைச் சமர்ப்பிப்பதன் பிரதான நோக்கமாகும்.

உத்தேச மின்சாரச் சட்டமூலமும் மற்றும் அதன் திருத்தங்களும் பின்வருமாறு பல்வேறு கண்ணோட்டங்களையும் மற்றும் கருசனைகளையும் வெளிப்படுத்துகின்ற விரிவான கலந்துரையாடல்களுக்கு உட்பட்டுள்ளன.

**இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு (இபொபஆகு)**

தற்போதைய நகல் சட்டமூலம் நுகர்வோரின் உரிமைகள் மற்றும் விரிவான விநியோகத்தரப்புச் சேவைப் பிரமாணக்குறிப்பு ஆகியவற்றுடன் தொடர்புடையவை போன்ற முன்னைய சட்டங்களில் காணப்படும் ஏற்பாடுகளை வெளிப்படையாகத் தவிர்ப்பதன் மூலம் நுகர்வோரின் உரிமைகளை அதிகளவில் பலவீனப்படுத்தும் என இபொபஆகு சுட்டிக் காட்டியுள்ளது. மின்சாரரத்தை உள்ளக ரீதியில் பகிர்ந்தளிப்பதற்கான பாரிய அடுக்குமாடிக் கட்டிடத்தொகுதிகள் மற்றும் EV மின்னேற்றல் நிலையங்கள் போன்ற ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள தனியார் நிறுவனங்களுக்குரிய விலக்களிப்புகளை நீக்குவதானது அத்தகைய செயற்பாடுகள் சட்டமுறையற்றதாக மாறுவதற்கு வழிவகுக்கும் எனவும் அத்துடன் ஆயிரக்கணக்கான மின்சார நுகர்வோரைப் பாதிக்கும் எனவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. மின்சார மார்க்கங்களுடன் தொடர்பான காணி சுவீகரிப்பு மற்றும் நஷ்டஈடு வழங்குதல் ஆகியவற்றுக்கான ஏற்பாடுகளை மீளறிமுகப்படுத்தவும் இபொபஆகு பரிந்துரை செய்கின்றது.

இபொபஆகு, அத்தகைய ஒரு நகர்வு அதன் 100% சுயாதீனத்தன்மைக்கு பங்கம்விளைவிக்கும் எனவும் ஒரு தொழில்நுட்ப செயல்முறை அரசியல் தலையீட்டிற்கு வழிவகுக்கும் என வலியுறுத்துவதால், மின்சார இறுப்பனவு தொடர்பாக நிதி, திட்டமிடுகை மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடன் கலந்தாலோசிக்குமாறு அதற்கு விடுத்த உத்தேச வேண்டுகோளுக்கு அது கடுமையாக எதிர்ப்புத்தெரிவித்தது. ஆணைக்குழு நீர் மற்றும் எண்ணெய் போன்ற ஏனைய நிறுவனங்களை ஒழுங்குறுத்துவதற்கான இபொபஆகு இன் அதிகார ஆணையை விரிவுபடுத்துமாறும் முன்மொழிந்தது.

போட்டியையும் மற்றும் தனியார் துறை பங்கேற்பையும் ஊக்குவிக்கும் உண்மையான எண்ணத்தை மாற்றும் என நம்புகின்ற இலங்கை மின்சார சபை (இமிச) கம்பனிகள் வழங்கும் சேவைகளையும் மற்றும் உற்பத்திகளையும் குறித்த திருத்தங்கள் உண்மையாகப் 'பிரிக்கும்' (unbundling) என்பதை விடவும் 'மீளிணைக்கும்' (rebundling) என்பது இபொபஆகு இன் கருத்தாகும். தேசிய மின்சார வலையமைப்பு சேவை வழங்கும்தரப்பின் (NTSP) கீழ் LTL ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் உத்தேச இடம்தான் குறித்த ஒரு கருசனை விடயமாக உள்ளது. ஆதலால் மின்னுற்பத்தியில் ஈடுபடுவதிலிருந்தும் கணிசமான அக்கறை முரண்பாடுகள் எழுவதிலிருந்தும் NTSP வெளிப்படையாகத் தடுக்கப்படும்.

**<u>இலங்கை மின்சார சபை (இமிச)</u>**

இமிச ஒரு அரச உடமை நிறுவனம் என்பதால் அதன் கண்ணோட்டம், மின்சார செலுத்துகைக் கம்பனியின் (Transco) 100% வீத அரச உடமைக்கான அரசாங்கத்தின் கொள்கை சார்ந்த தீர்மானத்திற்கு அமைவாக காணப்படுகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி(ஆஅவ) மற்றும் JICA போன்ற அபிவிருத்தி முகவர்நிலையங்களிலிருந்து பாரியளவில் வரும் என எட்டு ஆண்டுகளாக எதிர்பார்த்த 5 பில்லியன் USD பெறுமதியான மின்சார செலுத்துகை வலையமைப்பு விரிவாக்கத்திற்கு நிதி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் இந்த அணுகுமுறை ஒரு அரச கொள்கையாக ஆதரிக்கப்படுகின்றது.

தொழில்நுட்பம் சார்பாக, மின்சார அனுப்புகைக்கான "குறைந்த செலவு தொழில்நுட்ப சாத்திய கொள்கையின்" மீதான "பாதுகாப்பு மட்டுப்பாட்டுடனான சிக்கன அனுப்புகை" முறையை இமிச ஆதரித்தது. "குறைந்த செலவு" செலவுக் குறைப்பில் மட்டுமே ஒருமுகப்படும். "சிக்கன அனுப்புகை" மின்சார விநியோக வலையமைப்பின் நிலைத்திருக்கும்தன்மை, நம்பகத்தன்மை மற்றும் பாதுகாப்பு போன்ற பரந்த காரணிகளை உள்ளடக்கியதாகும் எனவும் செலவுக் குறைப்பை விடவும் நன்மை அனுகூலத்தில் இலக்குக்கொள்கின்ற ஒரு சந்தை மாதிரிக்கு இது மிகவும் பொருத்தமானது எனவும் இலங்கை மின்சார சபை தர்க்க ரீதியில் தெரிவிக்கின்றது.

**<u>லங்கா இலெக்ட்ரிசிற்றி கம்பனி</u>**

லங்கா இலெக்ட்ரிசிற்றி கம்பனி உத்தேச மின்சாரச் சட்டத்தின் திருத்தங்களுக்குள் அதன் சுயாதீனத்தையும் மற்றும் அதிக செயற்பாட்டு வினைத்திறனையும் பாதுகாப்பதிலுள்ள முக்கியத்துவத்தை தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தது. லங்கா இலெக்ட்ரிசிற்றி கம்பனி தற்பொழுது தனியான பயனுள்ள ஒரு மின்சாரப் பகிர்ந்தளிப்புக் கம்பனியாக இயங்குகின்றது. மேலும் அதன் பிரதிநிதிகள் அதன் செயற்பாடுகளையும் மற்றும் பங்குகளையும் ஒரு பெரிய, ஒருங்கிணைந்த மின்சார விநியோக கம்பனியின் (Disco) கீழ் "மீளிணைப்பு" அதன் சுயவாட்சியையும் மற்றும் சேவை தரத்தையும் அழித்துவிடும் என கவலை தெரிவிக்கின்றனர். லங்கா இலெக்ட்ரிசிற்றி கம்பெனியின் நிரூபிக்கப்பட்ட செயல்திறன், அதன் சுதந்திரத்தின் பயனாக, இமிச இன் செயல்திறனை விடவும் அதிகமாக உள்ளது என்பதை அவர்கள் முக்கியமாக சுட்டிக்காட்டினார்கள்.

**<u>இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் ஒன்றியம்</u>**

குறிப்பிட்டவொரு காலத்தின் பின்னர், மின்சார செலுத்துகை மார்க்க தாழ்வாரங்களின் (சொத்துக்கள் அல்ல) புறழ்வு இலங்கை அரசாங்கத்தை சென்றடைவதை உறுதிசெய்ய தெளிவான ஏற்பாடு எதுவும் கிடையாது.

**<u>இலங்கை வர்த்தகக் கூடம், தேசிய வர்த்தகக் கூடம், மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தித் தரப்புகளின் சம்மேளனம்</u>**

உத்தேச கட்டமைப்பு, குறித்த துறையை ஒரு ஏகபோக உரிமையிலிருந்து குவிந்த ஒரு பொது உரிமை நிலைக்கு மாற்றியமைக்கும். சுயாதீனத்துவத்தையும், ஒருமுகப்படுதலையும் மற்றும் பொறுப்புக்கூறுதலையும் கணிசமானளவு ஒருங்கிசையச்செய்கின்ற தனியான ஒரு மின்சார செலுத்துகை நிறுவனத்தின் கீழ் LTL போன்ற நிறுவனங்களுடன் இணைகின்ற மின்னுற்பத்தி மற்றும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு துணை நிறுவனங்களின் ஒதுக்கீடு அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. உண்மையான கட்டமைப்பு சார்ந்த சீர்திருத்தத்தை நோக்கி முற்போக்காக நகர்வதற்குப் பதிலாக, இந்த முன்மொழிவு தற்போதைய முறைமையின் மிகவும் சிக்கலான, குறைவான வெளிப்படையான பதிப்பை நிறுவனமயப்படுத்தும் அபாயத்தை தோற்றுவிக்கும்.

**<u>இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவகம் - IESL</u>**

தேசிய மின்சார ஆலோசனை சபையை (NEAC) ஒரு அமைச்சர் நியமிக்கும் ஒரு குழுவாக மாற்றியமைப்பது, நிறுவனசார் சுயாதீனத்தையும் மற்றும் அக்கறையுடைய பல தரப்புப் பிரதிநிதித்துவத்தையும் குறைத்துவிடும்.

மின்சார இறுப்பனவு விடயங்கள் பற்றி நிதி அமைச்சுடன் கலந்துரையாடுமாறு இபொபஆகு இற்கு விடுத்த உத்தேச வேண்டுகோள் முக்கியமான ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகளில் அரசியல் தலையீட்டு ஆபத்தைத் தோற்றுவிக்கும்.

**கூரையின் மேல் நிறுவி சூரிய சக்தியை அபிவிருத்தி செய்யும் தரப்புகளின் சங்கம்**

குறைந்த செலவு தொழில்நுட்ப சாத்தியப்பாட்டுக் கொள்கைக்குப் பதிலாக "பாதுகாப்பு மட்டுப்பாட்டுடனான சிக்கன அனுப்புகை" எண்ணக்கருவை அறிமுகப்படுத்துவது, மின்சார இறுப்பனவை விதிக்கும் போது வாடிக்கையாளர்களை எதிர்மறையாகப் பாதிக்கக்கூடும்.

குழு ஆராய்ந்ததன் பின்னர், இது தொடர்பில் சட்டமா அதிபரினது அபிப்பிராயத்தையும் மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தையும் பெற்றதன் பின்னர், குழுநிலை விவாதத்தின் போது சட்டமூலத்தில் உள்ளடக்க வேண்டிய பின்வரும் திருத்தங்களை பரிந்துரைத்தது.

**1. பிரிவு 10(2) (அ) இற்கான திருத்தம்: தேசிய முறைமை இயக்குநரின் பொறுப்புக்கள்**

தொடர்ச்சியான மற்றும் நம்பத்தகுந்த ஒரு மின்சார விநியோகத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு முதன்மைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களில் ஒரு குறிக்கோள் மாற்றப்பட்டுள்ளது. இந்தத் திருத்தம், தொடர்ச்சியான மற்றும் நம்பத்தகுந்த மின்சார விநியோகத்தை உறுதிசெய்யும் பொறுப்பை தேசிய முறைமை இயக்குநருக்கு சாட்டுகின்றது.

**2. 14(2) ஆம் பிரிவுக்கான திருத்தம்: மேலதிக மின்சார செலுத்துகை உரிமம் பெற்றவர்**

இந்த திருத்தம் காலத்தை மேலதிக மின்சார செலுத்துகை உரிமம் பெற்ற ஒருவரினால் நிர்மாணிக்கப்படும் மின்சார செலுத்துகைச் சொத்துக்களின் உரித்துடமை குறிப்பீடு செய்கின்றது.

**3. பிரிவு 18(3) (உ) (ii) இற்கான திருத்தம்: ஓய்வூதிய நிதியக் கடப்பாடுகள்**

இந்தத் திருத்தம் முதன்மைச் சட்டத்தின் I ஆம் அட்டவணையின் (ஏ) (ii) என்னும் விடயத்தின் கீழ் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள கம்பனிக்கு இலங்கை மின்சார சபை ஊழியர்களின் ஓய்வூதிய நிதிக் கடப்பாடுகளை குறித்தொதுக்கின்றது.

**4. 20 ஆம் வாசகத்திற்கும் மற்றும் I ஆம் அட்டவணைக்குமான திருத்தம்: மின்சாரக் கைத்தொழிலின் கட்டமைப்பு**

LTL ஹோல்டிங்ஸ் லிமிற்றட் (LTLH) கம்பனியிலும் மற்றும் ஸ்ரீலங்கா எனெர்ஜீஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்திலும் (SLE) இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான முறையே 35% மற்றும் 100% பங்குகள், குறித்த திருத்தச் சட்டமூலத்திற்கு இணங்க NTNSP இற்கு மாற்றப்படுதல் வேண்டும். பல அக்கறையுடைய தரப்புகள், இந்தப் பங்குகளை நேரடியாக திறைசேரிக்கு அல்லது முதன்மைச் சட்டத்தின் I ஆம் அட்டவணையின் (அ) என்னும் விடயத்தின் கீழ் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள மின்னுற்பத்திக் கம்பனிக்கு மாற்றுமாறு கோரியுள்ளன.

பூர்வாங்க மாற்றல் திட்டத்திற்கு இணங்க ஆறு (6) வாரிசுக் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட வேண்டியுள்ளன. அதாவது; (அ) என்னும் விடயத்தின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள மின்னுற்பத்திக் கம்பனி, (உ) என்னும் விடயத்தின் கீழ் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள NTNSP, (ஊ) என்னும் விடயத்தின் கீழ் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள NSO, (எ) என்னும் விடயத்தின் கீழ் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள மின்சாரப் பகிர்ந்தளிப்புக் கம்பனி, (ஏ) (i) என்னும் விடயத்தின் கீழ் மேலே (அ), (உ), (ஊ) மற்றும் (எ) ஆகியவற்றில் குறிப்பீடுசெய்யப்பட்டு பொறுப்பு சாட்டப்பட்டுள்ளவை தவிர இமிச இன் தொழிற்பாடுகளைப் பொறுப்பேற்பதற்கான ஒரு கம்பனி, மற்றும் முதன்மைச் சட்டத்தின் I ஆம் அட்டவணையின் (ஏ) (ii) என்னும் விடயத்தின் கீழ் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஊழியர் சேமலாப நிதியத்தினதும் ஓய்வூதிய நிதியத்தினதும் தொழிற்பாடுகளைப் பொறுப்பேற்பதற்கான ஒரு கம்பனி என்பன அந்தக் கம்பனிகளாகும்.

LTLH மற்றும் SLE ஆகியவற்றில் உள்ள இமிச இன் பங்குகளை மின்னுற்பத்திக் கம்பனிக்கு அல்லது மின்சாரப் பகிர்ந்தளிப்புக் கம்பனிக்கு மாற்றுவதானது, மின்சாரச் சந்தைகளில் ஒரு பாரிய ஏகபோக

உரிமையைத் தோற்றுவிக்கும். அத்துடன் NSO இற்கு மாற்றுவதும் ஒரு அக்கறை முரண்பாட்டைத் தோற்றுவிக்கும். (ஏ) (ii) என்னும் விடயத்தின் கீழ் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள கம்பனி நிதி முகாமைத்துவத்திற்கு மட்டுப்பட்ட கம்பனியாகும்.

ஆதலால், (ஏ) (i) என்னும் விடயத்தின் கீழ் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள கம்பனிக்கு அல்லது NTNSP இற்கு மாற்றுவதே சாத்தியமான தெரிவுகளாகும். வலுசக்தி அமைச்சு, LTLH மற்றும் SLE ஆகியவற்றை NTNSP இற்கு அதன் துணைக் கம்பனிகள் என்ற வகையில் சொத்துக்களாக வைப்பதற்கு திருத்தல் சட்டமூலத்தை ஆராய்ந்தது. அது அதன் மின்சார செலுத்துகை அபிவிருத்தியின் நிமித்தம் NTNSP இற்கு ஏனைய வருமானத்தை உருவாக்கும்.

எனினும், துறைசார் மேற்பார்வைக் குழு மற்றும் LTLH முகாமைத்துவத்தின் வேண்டுகோளை கருத்திற்கொண்டு, LTLH மற்றும் SLE ஆகியவற்றில் இமிச இற்கு உள்ள பங்குகளை (ஏ) (i) என்னும் விடயத்தின் கீழ் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள கம்பனிக்கு மாற்றுவதற்கு இந்தத் திருத்தம் காணப்படுகின்றது.

**5. 13 ஆம் வாசகத்திற்கான திருத்தம்: I ஆம் அட்டவணையின் (எ) (i) என்னும் விடயத்தின் கீழ் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள கம்பனியின் பணிப்பாளர்கள் சபை**

(எ) (i) என்னும் விடயத்தின் கீழ் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள கம்பனியின் பணிப்பாளர்கள் சபையினது தகைமைகள் பற்றிய தகவுதிறன்களை இந்தத் திருத்தம் குறிப்பீடுசெய்கின்றது.

**6. 13 ஆம் வாசகத்திற்கான திருத்தம்: வாரிசுக் கம்பனிகளுக்கான பணிப்பாளர்களின் நியமனம்**

இந்தத் திருத்தம் வாரிசுக் கம்பனிகளில் உள்ள பணிப்பாளர்களின் அக்கறை முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கானதாகும்.

**7. 18(2) (ஆ) பிரிவுக்கான திருத்தம்: இறுதி மாற்றல் திட்டம்**

இந்தத் திருத்தம் ஒரு ஆண்டளவில் இறுதி மாற்றல் திட்டத்தைத் தயாரிக்கும் காலத்தைக் குறைப்பதற்கானதாகும்.

**8. 28(1) ஆம் பிரிவுக்கான திருத்தம்: நியதிச்சட்ட விதிவிலக்கு**

இந்தத் திருத்தம் கூட்டுஆதனங்கள் போன்ற விஷேட நோக்கங்களின் நிமித்தம் மின்சார விநியோகத்திற்கு தேவையான நியதிச்சட்ட விலக்களிப்பை ஏற்பாடு செய்வதற்கானதாகும்.

**9. II ஆம் அட்டவணைக்கும் மற்றும் III ஆம் அட்டவணைக்குமான திருத்தம்**

இந்தத் திருத்தம் முதன்மைச் சட்டத்தை வரைவதில் நிகழ்ந்துள்ள தவறுகளை சீர்செய்யும் பொருட்டு 2013 இன் 31 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்தச்) சட்டத்தின் மூலம் 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்திற்கு அந்தத் திருத்தங்களை உள்ளடக்கி முதன்மைச் சட்டத்தின் II ஆம் அட்டவணையையும் மற்றும் III ஆம் அட்டவணையையும் மீளிடுவதற்கானதாகும்.

**<u>குழுவின் தீர்மானம்</u>**

குழு ஆலோசித்ததன் பின்னர், அது இலங்கை மின்சார (திருத்தல்) சட்டமூலத்தை ஏற்றுகொண்டு, அதன் பேரிலான குழுவின் அறிக்கை 2025 ஜுலை 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, குழுவின் தவிசாளரான பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எஸ்.எம். மரிக்கார் அவர்களினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் எனத் தீர்மானித்தது.